# தொடர்ந்து வீட்டிலிருந்தவாறு வேலை பார்க்கப் பலரும் விரும்புகின்றனர்: ஆய்வு

***Seithi Mediacorp,*** 26 April 2022

சிங்கப்பூரில் வீட்டில் இருந்தபடி வேலை பார்க்கும் பெரும்பாலானவர்கள் அலுவலகத்தைவிட்டுத் தொலைவிலிருந்து வேலைசெய்வதை விரும்புவதாக ஆய்வொன்றில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அதே நேரத்தில் நீக்குப்போக்கான வேலைமுறையையும் அவர்கள் விரும்புவதாகத் தெரியவந்துள்ளது.

கொள்கை ஆய்வுக் கழகம் ஈராயிரம் பேரிடம் நடத்திய கருத்தாய்வில் பத்தில் 9 பேர் அந்தக் கருத்தை முன்வைத்தனர்.

ஆண்களைக் காட்டிலும் பெண்கள் நீக்குப்போக்கான வேலைச்சூழலை அதிகம் நாடுகின்றனர். அதுவே புதிய நடைமுறையாக இருக்கவேண்டும் என்பது அத்தகையோரின் விருப்பம்.

வீட்டில் இருந்தபடியே வேலை செய்யவேண்டிய கட்டாயத்தில் இருப்பவர்களில் பாதிப்பேர், அதை விரும்பவில்லை என்றும் கூறியுள்ளனர்.

“எப்போது வேலை பார்க்கிறோம், எப்போது வீட்டில் இருக்கிறோம் என்பதே தெரியவில்லை”

என்று அவர்களில் பலர் கூறினர்.

வேலையிடத்தின் சக நண்பர்களை நேரில் சந்திக்க முடியாமல் இருப்பது குறித்து சிலர் வருத்தம் தெரிவித்தனர்.

வீட்டிலிருந்து வேலை பார்க்கும்போது முதலாளிக்கும் ஊழியருக்கும் இடையே நம்பிக்கையை வளர்ப்பது சிரமமாக இருக்கிறது என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டது.